<u>இராசிபுரம் நகராட்சி</u>

<u>நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு</u>

2023–ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 21–ஆம் தேதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.15 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 18.04.2023

தலைவர்,
நகர் மன்றம்.

<u>பொருள்கள்</u>

**I) 21.03.2023-ஆம் தேதியன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட கூட்டப் பொருள்**

( 1 ) பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022–23-இல் திரு ஏ.கே.பி. சின்ராஜ், நாமக்கல் பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் அவர்கள் இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 2–இல் 60000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்தேக்கத்தொட்டி அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ. 17.70 இலட்சத்திற்கு பரிந்துரை செய்துள்ளார். மேற்படி பணி செய்ய இந்நகராட்சியில் தல ஆய்வு செய்து அறிக்கை சமர்பிக்க மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல்அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சுமார் 40 குடியிருப்புகள் இரயில்வே பாதைக்கு மேற்குப் பகுதியில் அமைந்துள்ளதால் இதுவரை அப்பகுதி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவில்லை. எனவே அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க மேல்நிலைத்தொட்டி அமைக்கும் பணிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(719/23/இ1)

**தீர்மானம் எண். 328**

தற்காலிகமாக கைவிடப்பட்டது.

**II) 21.04.2023-ஆம் தேதியன்று நடைபெறும் சாதாரணக் கூட்டப் பொருள்கள்**

(1) இராசிபுரம் பழைய பேருந்து நிலைய வளாகத்தில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வெண்கல திருவுருவ சிலை 4 ½ X 4 ½ அடி அளவு இடத்தில், 10 அடி பீடம் அமைக்கப்பட்டு 7 ½ அடி உயரத்தில் நிறுவுவதற்கு அனுமதி கோரி திராவிட முன்னேற்ற கழகம், இராசிபுரம் நகர செயலாளர், திரு N.R. சங்கர் அவர்கள் 29.12.2022–இல் விண்ணப்பித்துள்ளார்கள். மேலும், சிலை பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பொறுப்பினை டாக்டர் கலைஞர் சிலை அமைப்பு குழுவே தனது பொறுப்பில் ஏற்றுக் கொள்ளுமெனவும், சிலை நிறுவுவது தொடர்பாக ஏற்படக்கூடிய முழு செலவுத் தொகையை ஏற்றுக் கொள்வதாகவும் சம்மதம் தெரிவித்து திராவிட முன்னேற்ற கழகம், இராசிபுரம் நகர செயலாளர், திரு N.R. சங்கர் அவர்கள் 16.03.2023–இல் கடிதம் சமர்ப்பித்துள்ளார்கள்.

மேற்க்கண்ட முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் திருவுருவ சிலை நிறுவ அனுமதி கோரியுள்ள இடம் நகரளவு ஆவணங்களில் சர்வே வார்டு–எ, பிளாக்–6, நகரளவு எண். 116/1 இராசிபுரம் நகராட்சி பேருந்து நிலையமென உள்ளது. மேற்க்கண்ட இடத்தில் சேலம்

மெயின் ரோட்டினை அணுகுசாலையாக கொண்டு **1.50** மீ. X **1.50** மீ. அளவு இடத்தில் திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் வெண்கல சிலை நிறுவ அனுமதி வழங்குவது சம்மந்தமாக மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அரசாணை (நிலை) எண். **221**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.**5**) துறை, நாள் **20.11.1998** மற்றும் கூடுதல் தலைமை செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சென்னை அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் சிலைகள் நிறுவுவது சம்மந்தமான சுற்றறிக்கை கடித ந.க.எண். RAVII(1)/ 1946/2019 நாள் **26.03.2019**–இன்படி சர்வே வார்டு–எ, பிளாக்–**6**, நகரளவு எண். **116/1** இராசிபுரம் நகராட்சி பழைய பேருந்து நிலையம் இடத்தில் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் வெண்கல திருவுருவ சிலை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சொந்த பொறுப்பில் அதற்காகும் தொகையினை நிறுவுவதற்கும், பராமரிப்பதற்கும் **1.50** மீ. X **1.50** மீ. அளவில் சேலம் மெயின் ரோட்டினை அணுகுசாலையாக கொண்டு போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடைஞ்சல் ஏதும் ஏற்படாமல் நிறுவுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(71/23/எப்1)**

**தீர்மானம் எண். 329**

அனுமதிக்கப்பட்டது.

**(2)** இராசிபுரம் நகராட்சி வ.உ.சி. நகரிலுள்ள **9.00** இலட்சம் மற்றும் **7.50** இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத்தொட்டிகளின் அடிப்பகுதியில் பேவர் பிளாக் கற்கள் பதிக்கும் பணி மேற்க்கொள்ள ரூ.**1.20** இலட்சம் மதிப்பீட்டிலான வருவாய் நிதிப் பணிக்கு **15.02.2023**–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு.கே.ஜி.சீனிவாசன், வீசாணம்,நாமக்கல் – மதிப்பீட்டைவிட **0.12**% குறைவு
2) M/s. வர்ஷா குரூப் ஆஃப் கன்ஸ்ரக்ஷன், நாமக்கல்– மதிப்பீட்டைவிட **0.45**% அதிகம்

மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு கே.ஜி. சீனிவாசன் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

அ) மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதிரு கே.ஜி. சீனிவாசன் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(624/23/இ1)**

**தீர்மானம் எண். 330**

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**(3)** இராசிபுரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் மேற்க்கொள்ளும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி பிரசுரக்

கட்டணம் ரூ. 98280/– M/s. Bright Advertising, Chennai நிறுவனத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| Times of India (ஈரோடு பதிப்பு நீங்கலாக) | – | ரூ. 56100.00 |
| தினமணி(ஈரோடு பதிப்பு நீங்கலாக) | – | ரூ. 37500.00 |
| GST 5% | – | ரூ. 4680.00 |
| மொத்தம் | – | ரூ. 98280.00 |

மேற்க்காணும் பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(3899/22/எச்1)**

**தீர்மானம் எண். 331**

அனுமதிக்கப்பட்டது.

(4) நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண். 17404/2022/எம்–1, நாள் 10.03.2023 அவர்களது கடிதத்தில் இராசிபுரம் நகராட்சியில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளி வளாகத்திலுள்ள 1956–ஆம் ஆண்டு கட்டப்பட்ட தெற்குப் பார்த்த ஓட்டுக் கட்டடத்தை இடித்துவிட்டு ஒருங்கிணைந்த சமையற்கூடம் ரூ. 26.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது. இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

அ) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1191/23/இ1)**

**தீர்மானம் எண். 332**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சியில் பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளி வளாகத்திலுள்ள 1956–ஆம் ஆண்டு கட்டப்பட்ட தெற்குப் பார்த்த ஓட்டுப் கட்டடத்தை இடித்துவிட்டு ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி,

மேற்ப்படி கட்டடத்தின் உறுதி தன்மையை ஆய்வு செய்து அறிக்கை வழங்கப்பட்டதற்கு ஆய்வுக் கட்டணம் ரூ. 10,000/– ஆகும். இப்பணியின் அவசர அவசியம் கருதி ஆய்வுக் கட்டணம் ரூ. 10,000/– தர்மபுரி அரசு பொறியியல் கல்லூரிக்கு திரு க. கார்த்திக், உதவிப்பொறியாளரால் செலுத்தப்பட்டது. நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ரூ. 10,000/–யை திரு க. கார்த்திக், உதவிப்பொறியாளருக்கு வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது. இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

அ) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ரூ.10,000/–யை திரு.க.கார்த்திக், உதவிப்பொறியாளருக்கு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1191/23/இ1)**

**தீர்மானம் எண். 333**

அனுமதிக்கப்பட்டது.

**( 6 )** இராசிபுரம் நகராட்சியில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்டுவதற்காக பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளி வளாகத்திலுள்ள தெற்குப் பார்த்த ஓட்டுக் கட்டடத்தை இடிக்கும் பணிக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி முறையில் மேற்க்கொள்ள 30.03.2023 அன்று கலந்துகொள்ள அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி, 30.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. அன்று நடைபெற்ற ஏலத்தில் ஏலதாரர்கள் கலந்து கொண்ட விவரங்கள் வருமாறு.

| வ.எண் | ஏலதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | ஏலத் தொகை |
|---|---|---|
| 1. | திரு எம். பெரியசாமி, 78, அமைச்சர் கோவிந்தசாமி தெரு, இராசிபுரம் | ரூ.20750/– |
| 2. | திரு எம். வெங்கடேஷ், 24ஜி/1, வரதன் தெரு, இராசிபுரம் | ரூ.20600/– |
| 3. | திரு எம். ரஹமத்துல்லா, 25/2, வரதன் தெரு, இராசிபுரம் | ரூ.20700/– |

ஏலத்தில் திரு எம். பெரியசாமி என்பவர் ரூ. 20750/– என்ற அதிகபட்ச ஏலத் தொகை கோரியுள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி திட்டத்திற்காக ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்ட வேண்டியுள்ளது. மேற்படி பணியை 15.05.2023–க்குள் முடிக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்படி ஏலத்தொகையினை உள்ளூர் விலை விகிதத்திற்கு ஏற்றதாகவும், ஏல மதிப்பினைவிட அதிகமாக உள்ளதாலும் மற்றொரு ஏலம் கோர கால அவகாசம் இல்லை. எனவே, மேற்ப்படி ஏல உச்சத் தொகை ரூ. 20750/– + 18% சரக்கு சேவை வரி ரூ. 3735/– கோரிய அன்னராது ஏலத் தொகையினை ஏற்று பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளி வளாகத்திலுள்ள தெற்குப் பார்த்த ஓட்டுக் கட்டடத்தை இடிக்கும் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(1191/23/இ1)

**தீர்மானம் எண். 334**

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(7) இராசிபுரம்நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் இராசிபுரம்ரோட்டரி சங்கம் சார்பில் பொதுமக்கள் பயன்பொறும் வகையில் புதிய R.O Plant அமைத்து தருவதாகவும் அதற்கான குடிநீர் மற்றும் மின்சார வசதி செய்து வழங்கவும் கோரியுள்ளார்கள். எனவே, மேற்கண்ட இடத்தில் இராசிபுரம் நகராட்சி மூலம் இலவசமாக குடிநீர் வசதி மற்றும் மின்சார வசதி செய்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(3112/22/இ2)

**தீர்மானம் எண். 335**

அனுமதிக்கப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள தட்டான்குட்டை வடிகால் கழிவுநீர் மற்றும் காட்டூர் சாலை கழிவுநீர் தட்டான்குட்டை ஏரியில் கலப்பதால் ஏரி மாசுபடுவதாக தெரிவித்து சென்னை உயர்நீதி மன்ற பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்து வழக்கு நடைபெற்று வருகிறது. எனவே தட்டான்குட்டை சாலை வடிகால் கழிவுநீர் மற்றும் காட்டூர் சாலை வடிகாலில் செல்லும் கழிவுநீர் ஏரியில் கலப்பதால் தினசரி காலை, நண்பகல், மதியம், மாலை ஆகிய வேலைகளில் கழிவுநீரை எடுத்து Chennai Mettex Lab Pvt Ltd -இல் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அதற்கான தொகை ரூ. 14160/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(448/23/இ2)

**தீர்மானம் எண். 336**

அனுமதிக்கப்பட்டது.

(9) இராசிபுரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப் பணியை மேற்கொண்டு வரும் Relyon Facility Services PVT Ltd., Chennai நிறுவனத்திற்கு 31.03.2023–இல் ஒப்பந்த பணிக்காலம் முடிவடைவதால் மேலும், 01.04.2023 முதல் தற்போது டெண்டர் பெற்றுள்ள நிறுவனம் அனுமதிக்கும் வரை பணி நீடிப்பு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2293/19/எச்1)

**தீர்மானம் எண். 337**

அனுமதிக்கப்பட்டது.

**( 10 )** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டுக் குத்தகையினங்களில் பொருட்கள் பாதுகாப்பு அறைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு விளம்பரம் செய்தமைக்கு Bright Advertising நிறுவனத்திலிருந்து ரூ. 4452/— தொகைக்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. தொகை வழங்குவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 338**

அனுமதிக்கப்பட்டது.

**( 11 )** இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் அரசாணை நிலை எண். 97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.02.2007 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 748/2008/குவ2, நாள் 21.09.2009—இன்படி புதிதாக குடிநீர் இணைப்பு பெறுபவர்களிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சாலை பராமரிப்பு கட்டணம் முந்தைய ஆண்டிலிருந்து 5% உயர்த்தி வசூல் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்கும் போது சாலை பராமரிப்புக் கட்டணம் கீழ்கண்டுள்ளவாறு 5% 01.04.2023 முதல் உயர்த்தி வசூல் செய்யப்படவுள்ளது. நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 5% சாலை பராமரிப்புக் கட்டணம் உயர்த்தியதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | சாலை விவரம் | 01.04.2022 முதல் வசூலிக்கப்படும் கட்டணம் | 01.04.2023 முதல் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணம் |
|---|---|---|---|
| 1 | கருங்கல் ஜல்லி சாலை | | |
| | 30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 1989/- | ரூ. 2090/- |
| | 30 முதல் 90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 3223/- | ரூ. 3385/- |
| 2 | தார் சாலை | | |
| | 30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 4052/- | ரூ. 4255/- |
| | 30 முதல் 90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 5135/- | ரூ. 5392/- |
| 3 | சிமெண்ட் சாலை | | |
| | 30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 4677/- | ரூ. 4911/- |
| | 30 முதல் 90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 5765/- | ரூ. 6054/- |

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(1352/23/இ2)

**தீர்மானம் எண். 339**

அங்கீகரிக்கப்பட்டது.

**( 12 )** இராசிபுரம் நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அடையாள அட்டை வழங்க கோரியதன்பேரில் நகர் மன்றத் தலைவர் உள்ளிட்ட அனைவருக்கும் அடையாள அட்டை தயார் செய்து வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 5000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், இப்பணியினை உள்ளூர் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

மன்றம் அனுமதிக்கலாம்.

(1341/22/பி3)

**தீர்மானம் எண். 340**

அனுமதிக்கப்பட்டது.

**( 13 )** இந்நகராட்சி வார்டு எண். 2, கோரைக்காடு காட்டுக்கொட்டாய் பகுதியிலுள்ள மக்களுக்கு குடிநீர் வசதி வழங்க பழைய பேருந்து நிலையத்திலிருந்து சேலம் ரோடு ரயில்வே கிராஸ் அருகில் பகிர்மான குழாய் இணைத்து Line Booster மோட்டார் வைத்து குடிநீர் வசதி செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 1.80 இலட்சமாகும். மேற்க்கண்டப் பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது. இப்பணியை குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு** :

அ) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1409/23/இ2)

**தீர்மானம் எண். 341**

அனுமதிக்கப்பட்டது.

**( 14 )** இராசிபுரம் நகராட்சிக்கு பெரு மூலதன நிதி (CGF) 2022–23–இன்கீழ் குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் 29404/2022/எஸ்எஸ்2, நாள் 20.03.2023–இன்படி ரூ. 354.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கையாக தொழில்நுட்ப அங்கீகாரம் வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொழில்நுட்ப அங்கீகாரம் வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(1076/22/இ2)

**தீர்மானம் எண். 342**

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**( 15 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளுக்கு தினசரி சீரான குடிநீர் வழங்க நகராட்சிக்குட்பட்ட பகுதிகளை அளவீடு செய்து Master Sump கட்ட Design தயாரிக்கவும், DPR தயார் செய்யும் பணிகள் மேற்கொள்ளவும் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் கீழ்கண்டவாறு.

1. Sathyam Engineering, Chennai - திட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு 2 % தொகை
2. Ect. Infra Solutions Pvt. Ltd., Chennai - திட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு 2 ¾ % தொகை

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு 2 % தொகை ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Sathyam Engineering, Chennai - நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. முன் அனுமதி பெற்று குறைந்த திட்ட மதிப்பீடு அளித்துள்ள நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்க மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு 2 % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Sathyam Engineering, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(1076/23/இ2)**

**தீர்மானம் எண். 343**

அனுமதிக்கப்பட்டது.

**( 16 )** இராசிபுரம் நகராட்சியில் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின்கீழ் பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்டுதல் பணி மேற்கொள்ள ரூ. 20.00 இலட்சம் மதிப்பீட்டிலான கல்வி நிதிப் பணிக்கு **06.04.2023–இல்** வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| **1.** | M/s. சுமதி இன்ஃப்ராடெக் பில்டர்ஸ்,<br>லிங்கப்பா தெரு, இராசிபுரம். | மதிப்பீட்டைவிட 0.12 % குறைவு |
| **2.** | M/s. அஞ்சனாஸ்ரீ ஆர்க்இஃப்ரா, ஒப்பந்ததாரர்,<br>நல்லதம்பி ரத்னவேல் காடு, ஆட்டையாம்பட்டி, சேலம் | மதிப்பீட்டைவிட 1.82 % அதிகம் |

மதிப்பீட்டைவிட 0.12 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. சுமதி இன்ஃப்ராடெக் பில்டர்ஸ் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட 0.12 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. சுமதி இன்ஃப்ராடெக் பில்டர்ஸ் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(1191/23/இ1)**

**தீர்மானம் எண். 344**

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

( 17 ) இந்நகராட்சிக்கு எழுதுபொருட்கள், ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் தங்கள் நிறுவனம் மூலம் எழுதுபொருட்கள், கணினி உபகரணங்கள், படிவங்கள் மற்றும் புத்தகங்கள் மிக சிறந்த முறையில் தரமாக விற்பனை செய்வதால் ஆர்டர் வழங்க கோரி 04.04.2023 அன்று கடிதம் எங்களுக்கு வரப்பெற்றுள்ளது.

மேற்படி நிறுவனத்தில் வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் பெண்கள் விதவைகள், ஆதரவற்றோர் ஆகிய மகளீர்களை உறுப்பினர்களாக சேர்த்து வேலை வாய்ப்பு அளித்து வருவதால், இந்த சங்கத்தில் அரசு துறைகளும் மற்றும் அரசை சார்ந்த முறை நிறுவனங்களும் விலைப்புள்ளி கோராமல் நேரடியாக கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசாணை எண். 283, நாள் 18.06.1998–இல் ஆணை பிறப்பித்துள்ளது.

இந்நகராட்சிக்கு எழுது பொருட்கள், பதிவேடுகள், சேவை மையத்திற்குத் தேவையான படிவங்கள் மற்றும் சொத்துவரி, குடிநீர் வரி, ரசீதுகள் அரசாணை எண். 283 நாள் 18.06.1998– இன்படி மேற்படி நிறுவனமான ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் அவர்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யவும், பணியாணை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(பி3/1072/23)

**தீர்மானம் எண். 345**

அனுமதிக்கப்பட்டது.

( 18 ) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் லாரிகள் TN 28 AS 0110, TN 28 AS 0104 மற்றும் இலகு ரக வாகனங்கள் டாட்டா எஸ் TN 28 AS 0111, TN 28 BW 9274, TN 28 BW 9298, TN 28 BW 9243, TN 28 BW 9642, TN 28 BW 9646, TN 28 BW 9706 ஆகியவற்றின் டயர்கள் தேய்மானம் அடைந்துள்ளது. எனவே புதிய டயர்கள் வாங்கி வழங்க ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 4.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1074/23)

**தீர்மானம் எண். 346**

அனுமதிக்கப்பட்டது.

( 19 ) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் இலகு ரக வாகனங்கள் டாட்டா எஸ் TN 28 AS 0111, TN 28 BW 9298, TN 28 BW 9243, TN 28 BW 9642, TN 28 BW 9646 ஆகியவற்றின் மின்கலன்களின் பயன்பாட்டுக்காலம் முடிந்து விட்டபடியால் தற்போது பயன்படுத்த இயலாமலுள்ளது. எனவே புதிய மின்கலன்கள் வாங்கி வழங்க ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 30,000–க்கு (முப்பது ஆயிரம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1074/23)

**தீர்மானம் எண். 347**

அனுமதிக்கப்பட்டது.

**( 20 )** இராசிபுரம் நகராட்சியில் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 15–இன்கீழ் சேலம் ரோடில் அமைந்துள்ள இராஜவாய்க்காலை JCB இயந்திரம் கொண்டு தூர் வரும் பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | M/s. சுமதி இன்ஃப்ராடெக் பில்டர்ஸ், இராசிபுரம். | ரூ. 1253/– |
| 2. | திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம். | ரூ. 1280/– |
| 3. | திருமதி ஆர். சாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம். | ரூ. 1260/– |

வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் M/s. சுமதி இன்ஃப்ராடெக் பில்டர்ஸ் ஒப்பந்ததாரரின் குறைந்த விலைப்புள்ளி ஏற்கப்பட்டு 1920–ஆம் வருடத்தைய நகராட்சி சட்ட 15–இன்கீழ் பணிகள் செய்து முடிக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்பட்டது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

(114/23/இ1)

**தீர்மானம் எண். 348**

பதிவு செய்யப்பட்டது.

**( 21 )** இராசிபுரம் நகராட்சியில் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 15–இன்கீழ் வார்டு 21 நோட்டக்கார தெரு, அப்பு சந்து, ரங்கப்பன் தெருவில் குடிநீர் விநியோக பகிர்மான குழாய் மற்றும் ஆழ்துளைக் கிணறு நீர் வசதி செய்தல் பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | M/s. வர்ஷா குரூப் ஆஃப் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், நாமக்கல். | 0.11 % குறைவு. |
| 2. | M/s. சுமதி இன்ஃப்ராடெக் பில்டர்ஸ், இராசிபுரம். | 0.64 % அதிகம். |

வரப்பெற்ற 2 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s. வர்ஷா குரூப் ஆஃப் கன்ஸ்ட்ரக்ஷனின் விலைப்புள்ளி ஏற்கப்பட்டு 1920–ஆம் வருடத்தைய நகராட்சி சட்ட 15–இன்கீழ் பணிகள் செய்து முடிக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்பட்டது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

(2645/2022/இ2)

**தீர்மானம் எண். 349**

பதிவு செய்யப்பட்டது.

**( 22 )** இராசிபுரம் நகராட்சி எல்லைக்குள் சர்வே வார்டு – எ, பிளாக் – 2, (பழைய சர்வே எண். 192/2, 3, 4, 193/15 பகுதி) நகரளவு எண். 18/20, 21, 22–இல் மனுதாரர் திரு கே. ஜெயக்குமார்

என்பவர் 1267.50 ச.மீ. பரப்பளவில் 5 குடியிருப்பு மனைகள் அமைக்க நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண். NKL/SDIDK5 PV/8321/2022/TCP நாள் 21.03.2023–இல் மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு எண். DTCP/Namakkal/Layout No. 90/2023 என எண்ணிட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்க்கண்ட மனைப்பிரிவில் சர்வே வார்டு – எ, பிளாக் – 2, நகரளவு எண். 18/21, 22–இல் கிழமேல் வடக்குப் பக்கம் 35.64 மீட்டர், தெற்குப் பக்கம் 35.50 மீட்டர், தென்வடல் கிழக்கு மற்றும் மேற்குப்பக்கம் 9 மீட்டர் அகலத்தில் ஆக பரப்பு 320.13 சதுர மீட்டர் இடத்தினை பொது மக்கள் சாலை பயன்பாட்டிற்கும் மற்றும் சர்வே வார்டு – எ, பிளாக் – 2, நகரளவு எண். 18/20–இல் கிழமேல் இருபுறமும் 3.05 மீட்டர், தென்வடல் இருபுறமும் 3.05 மீட்டர் ஆக பரப்பு 9.30 சதுரமீட்டர் பொது உபயோகத்திற்கான இடத்தினையும் ஆக மொத்தம் 329.43 சதுர மீட்டர் சாலை நிலங்கள் மற்றும் பொது உபயோக நிலம் ஆகியவை பூராவும் தானமாக நகராட்சிக்கு தான பத்திர ஆவண எண். 1609/2023 நாள் 08.03.2023–இல் தான பத்திரம் பதிவு செய்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்கள் மூலம் இந்நகராட்சியில் சமர்ப்பித்துள்ளதை பின்னேற்பு ஒப்புதல் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) அரசாணை நிலை எண். 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 09.12.2020 மற்றும் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 12843/2022/டிபி2 நாள் 20.10.2022 சுற்றறிக்கையின்படி மேற்க்கண்ட தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிலுள்ள சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை தானப்பத்திரத்தின்படி தானமாக ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை இந்நகராட்சி பராமரிப்பிற்கு ஏற்க, தானமாக பத்திர பதிவு செய்ததை இம்மன்றம் பின்னேற்பு ஒப்புதல் வழங்கலாம்.

2) சாலையினை சாலைப் பதிவேட்டில் பதிவு செய்யவும் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தினை அசையா சொத்து பதிவேட்டில் பதிவு செய்யவும் மன்றம் முடிவு செய்யலாம்.

3) மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் செய்வதற்கு பொறியியல் பிரிவு மூலம் தெரிவிக்கும் மதிப்பீட்டுத் தொகையை மனுதாரர் செலுத்திய பின்னரும், மனுதாரரால் செய்யப்படும் பணிகளை மூன்றாம் நபர் (பொறியியல் கல்லூரி) சான்று பெற்ற பின்னர், இம்மனைப் பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் அனுமதிக்கலாம்.

(எப்1/1314/23)

**தீர்மானம் எண். 350**

அனுமதிக்கப்பட்டது.

( 23 ) இராசிபுரம் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் தட்டான்குட்டை சாலையில் உள்ள MCC–இன் நுழைவாயிலில் புதிய உலோகத்தாலான பெயர்ப்பலகை வைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 20,000/-க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(1507/23/எச்1)

**தீர்மானம் எண். 351**

அனுமதிக்கப்பட்டது.

( 24 ) இராசிபுரம் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் தட்டான்குட்டை சாலையிலுள்ள வளமீட்பு மையம் – 1 மற்றும் மையம் – 2–ற்கு புதிய உலோகத்தாலான பெயர்ப்பலகைகள் வைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 20,000/-க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(1508/23/எச்1)

**தீர்மானம் எண். 352**

அனுமதிக்கப்பட்டது.

**( 25 )** இராசிபுரம் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் தட்டான்குட்டை சாலையிலுள்ள நுண் உரம் செயலாக்க மையம் – 1 மற்றும் மையம் – 2–ற்கு புதிய உலோகத்தாலான பெயர்ப்பலகைகள் வைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 20,000/-க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1506/23/எச்1)

**தீர்மானம் எண். 353**

அனுமதிக்கப்பட்டது.

**( 26 )** இராசிபுரம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் (லாரி) எண்.TN 28 AS 0110–க்கு தகுதிச்சான்று பெறுவதற்கு, மேற்க்கண்ட வாகனம் பழுதுகள் சரிசெய்ய Krysttal Motors (P) Ltd., Salem அவர்களின் நிறுவனத்தில் தொகை ரூ. 2,46,498/- செலவாகுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதற்கும், உத்தேச செலவினத் தொகை ரூ. 2,60,000/- மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதற்கு மன்றம் ஏற்கலாம்.
2) செலவினம் ரூ. 2.60 லட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(எச்1/1074/23)

**தீர்மானம் எண். 354**

அனுமதிக்கப்பட்டது.

**( 27 )** இராசிபுரம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணிக்கு தேவையான தளவாட சாமான்கள் வாங்கி வழங்க ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1) ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், 60/101 AIB No,6 ஆர்.எஸ் பில்டிங் குளக்கரை சந்து, காமராஜ நகர், நாமக்கல். ரூ. 3,00,910/-
2) ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், 1/34,காளப்பநாயக்கன்பட்டி, சேந்தமங்கலம், நாமக்கல் ரூ.3,28,103/-

மேற்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1–இல் காணும் ஒப்பந்ததாரர் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், மேலும் தளவாட சாமான்கள்

வாங்கிக்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ. 3,20,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(1329/23/எச்1)**

**தீர்மானம் எண். 355**

அனுமதிக்கப்பட்டது.

**( 28 )** இராசிபுரம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணிக்கு தேவையான கிருமி நாசினி வாங்கி வழங்க ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1) ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், 60/101 AIB No,6 ஆர்.எஸ் பில்டிங் குளக்கரை சந்து, காமராஜ நகர், நாமக்கல். ரூ. 2,41,760/-
2) ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், 1/34,காளப்பநாயக்கன்பட்டி, சேந்தமங்கலம், நாமக்கல் ரூ. 2,46,600/-

மேற்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1–இல் காணும் ஒப்பந்ததாரர் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், மேலும் கிருமி நாசினி வாங்கிக்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ. 2,60,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(1330/23/எச்1)**

**தீர்மானம் எண். 356**

அனுமதிக்கப்பட்டது.

**( 29 )** இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 22, அரச மரம் சந்து பகுதியிலுள்ள சின்டெக்ஸ் டேங்க் பயன்பாடற்ற நிலையில் போக்குவரத்து வசதிக்கு இடையூறாக உள்ளது. எனவே, அப்பகுதியிலுள்ள பயன்பாடற்ற நிலையிலுள்ள சின்டெக்ஸ் டேங்கை அகற்ற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(1535/23/இ2)**

**தீர்மானம் எண். 357**

அனுமதிக்கப்பட்டது.

( 30 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 2, ஜெயபால் நகர், கட்டனாச்சம்பட்டி பிளாக் – 1 பகுதியில் குடிநீர் விநியோகம் செய்ய பகிமான குழாய் இல்லாத காரணத்தால் வள்ளலார் கோவில் பின்புறமுள்ள பகிர்மான குழாயிலிருந்து நீட்டிப்பு செய்து குடிநீர் வசதி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1.00 இலட்சமாகும். மேற்க்காணும் மதிப்பீடு ரூ. 1.00 இலட்சத்திற்கான பணி மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1534/23/இ2)

**தீர்மானம் எண். 358**

அனுமதிக்கப்பட்டது.

( 31 ) இந்நகராட்சி வார்டு எண். 19, காட்டூர் காட்டுக்கொட்டாய் பகுதியில் ஏற்கனவே உள்ள கைப்பம்பு பொருத்திய ஆழ்துளைக் கிணற்றில் மின்மோட்டார் பொருத்தி சின்டெக்ஸ் டேங்க் வைத்து தண்ணீர் வசதி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1.50 இலட்சமாகும். இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகின்றது. இப்பணிக்கான செலவினம் ரூ. 1.50 இலட்சம் குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு :

அ) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
ஆ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1484/23/இ2)

**தீர்மானம் எண். 359**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/– இரா. முனைவர் கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி.